# சேரர்களின் கொங்கு நாட்டுப் படையெடுப்பும் பொருளாதார மேலாண்மையும்

10

**நவீன் பிரசாத் சி**

**உதவிப் பேராசிரியர்,**

**டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 48**

snaveenprasath08@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலம் முதல் கொங்கு நாடு ஒரு தனித்துவமான நிலப்பகுதியாகத் திகழ்ந்ததோடு, அதன் இயற்கை வளங்களுக்காகப் புகழ்பெற்றிருந்தது. பொ.ஆ.பி முதலாம் நூற்றாண்டில் சேர மன்னர்கள் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றியது, வெறும் நில ஆதிக்கத்திற்காக மட்டுமின்றி, பொருளாதார மற்றும் வணிக மேலாதிக்கத்திற்காகவும் அமைந்தது. கொங்கு நாட்டில் கிடைத்த நீல மணிகள், தங்கம், தந்தம் மற்றும் நறுமண மரங்கள் போன்றவற்றைச் சேரர்கள் தங்கள் கடல் வணிகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக, உள்நாடாக இருந்த கொங்குப் பகுதி, சேரர்களின் முசிறி மற்றும் தொண்டித் துறைமுகங்கள் வழியாக உரோம் மற்றும் யவன தேசங்களுடன் நேரடி வணிகத் தொடர்பைப் பெற்றது. இக்கட்டுரை, சேரர்களின் படையெடுப்பால் கொங்கு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள், பண்டமாற்று முறை நாணயப் புழக்கமாக மாறிய விதம் மற்றும் உலகளாவிய சந்தையில் கொங்கு நாட்டின் வளங்கள் பெற்ற இடம் ஆகியவற்றை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்குகிறது.

**ஆய்வு நோக்கம்**

கொங்குநாட்டின் மீதான சேரர்களின் படையெடுப்பின் வழியே கொங்குப் பகுதி கண்ட பொருளாதார அரசியல் மாற்றங்களைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

சேரர்கள், கொங்கு நாட்டின் புவியியல், படையெடுப்பிற்கான பொருளாதாரக் காரணங்கள், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அரசியல் மேலாதிக்கம், மூவருள் ஒருவன் துப்பாகியர், உலகளாவிய கடல் வணிகம், நாணயப் புழக்கம், இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு.

**முன்னுரை**

சங்க காலம் தொட்டு தேவாரக் காலம் வரை கொங்கு நாட்டை ஒரு தனிநாடகக் கொள்ளும் நிலை இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது. "கொங்கர்நாடு அகப்படுத்தி" என பதிற்றுப்பத்தும்."கொன்னார் அயில்வேல் மறவர் பயில்கொங்கர் நாடு கடந்த்தருளி"என சேக்கிழாரும் குறிப்பிடுகின்றனர். கொங்குநாட்டின் பூர்வீகத் தலைவர்களாக வேளீர்களும், பல சிற்றரச பரம்பரையினரும் அரசாண்டனர். பின் இவர்களின் மீது தொடர் படையெடுப்புகளை நடத்தி சேரர்கள் கொங்குப்பகுதிகளை கைப்பற்றிக் கொண்டனர். இக்கட்டுரை சேரர்கள் கொங்கு நாட்டைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களையும், அதன் விளைவாக ஏற்பட்ட வணிக மாற்றங்களையும் ஆராய்கிறது..

**கொங்கு நாட்டின் புவியியல் மற்றும் இயற்கை வளம்**

முதலில் சேரர்களுக்கு ஏன் கொங்கு நாட்டின் மீது படையெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது ? கடையேழு வள்ளல்களில் பெரும்பாலானோர் கொங்குப்பகுதியிலும் அதன் எல்லைகளும் சிற்றரசர்களாகவும் வேளீர்களாகவும் இருந்தனர். தகடூர்- அதியமான், கொல்லி- ஓரி, பழனி – பேகன். கொங்குநாட்டின் நீல மணிகள் பல இன குழுத் தலைவர்களை சிற்றாசர்களாக உயர்த்தியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கொங்குநாடு வளம்மிக்க குறிஞ்சியையும், அடர்ந்த காடுகளையும், நீர்வளமும் நிலவளமும் மிக்க மருதத்திணைப் பகுதிகளையும் கொண்டது. இவற்றை மேலும் செழுமை செய்ய ஏரிகள், குளங்கள் ஆறுகள் இருந்தன. இவற்றில் தென்கொங்குப் பகுதியில் மட்டும் பதிமூன்று ஆறுகள் இருந்தது என டாக்டர் துரை அங்குசாமி குறிப்பிடுகிறார்.

சேரர்களின் கவனம் கொங்குநாட்டின் மீது திரும்புவதற்கு ஏற்ற காரணிகளாக இருப்பவை இங்கிருந்த யானைகள், பலவித மணிகள், அகில், வேங்கை போன்ற மரங்கள் மற்றும் வளம் மிக்க நிலப்பரப்பு போன்றவையே. இவை தவிர அக்காலத்தில் பல்லடம் அருகே உள்ள பொங்கலூருக்கு அக்காலத்தில் பொன்கல்லூர் என்று பெயர். பொன் கற்கள் அதிக அளவில் கிடைத்ததால் இந்தப் பெயரை வழங்கி இருக்கலாம், ஈரோட்டின் ஊதியூர் மலை, ஏமாந்தூர், கோபி போன்ற இடங்களில் தங்கம் கிடைத்துள்ளது என கோவை மாவட்ட தொல்லியல் கையேடு பக்கம் 6 இல் பதிவிட்டுள்ளனர். கொங்குநாடு என்பது செழுமையான பகுதியாக இருந்துள்ளது இந்த செழுமைமிக்க பகுதி மீது பல காரணங்களுக்காகப் போர்கள் நிகழ்ந்துள்ளது.

**சேரர்களின் படையெடுப்பிற்கான பொருளாதாரக் காரணங்கள்**

சேரர்கள் பொ.ஆ.பி முதலாம் நூற்றாண்டில் கொங்கு நாட்டின் தென் பகுதியில் சில ஊர்களைக் கைபற்றி தங்களின் எல்லையை விரிவு செய்ய ஆரம்பித்தனர். சேரர்கள்

கொங்கு நாட்டை தங்களின் பலத்தையும், வணிகத் தொடர்பையும் மேம்படுத்திக் கொள்ளப் பயன்படுத்தினர். யானைகளையும் இங்குள்ள குடிகளையும், இந்நாட்டின் திரைப் பொருளையும் தங்களின் அரசு வலுப்பெறப் பயன்படுத்தினர். இந்நிகழ்வுகளில் எதிர்குரலும், எதிர்நிகழ்வுகளும் கடுமையாக நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கொங்குப் பகுதியின் பூர்வ குடிகள் சேரர்களை எதிர்த்துக் கடுமையாக போர்புரிந்துள்ளனர். இது குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கிறது.

குறிப்பிட்டுக் கூறினால் அதிகமான், ஓரி போன்ற வள்ளல்களின் எல்லைகள் மீது சேர அரசன் பெருஞ்சேரல் இரும்பொறை பல நாட்கள் போர் புரிந்துள்ளான் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் கண்ணெதிரே காண்பிக்கின்றன. வள்ளல்களின் வள்ளல் தன்மையைப் பேணிக்காப்பது அவர்தம் குணமும், நிலவளமும் தான். அப்படிப்பட்ட வள்ளல்களில் நிலங்களில் உள்ள செல்வங்களை வணிகத்திற்குப் பயன்படுத்த எண்ணி அதிகமான் நெடுமான் அஞ்சி ஆண்ட தகடூரை பெருஞ்சேரல் இரும்பொறை பல நாட்கள் போர் தொடுத்து கைபற்றிப் பின் தகடூரை அழித்தான் இதன் காரணமாக அவனுக்குத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற பட்டப்பெயர் வைக்கப்பட்டது இச்செய்தி பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது.

“தகடூர் எறிந்த நொச்சி தந்தெய்திய

அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறை” (பதிற்று – பதிகம் 8 ம் பத்து)

**அரசியல் மேலாதிக்கம் - எதிர்ப்பும் நட்பும்**

சங்க காலத்தில் போர்களில் வெற்றிபெற வீரம் எவ்வளவு மூலதாமோ அதே அளவுக்கு எண்ணிக்கையும் முக்கியம் ஓரிடத்தில் எல்லோரோடும் பகைகொல்வது இயலாது சில சமயங்களில் சேரர்கள் தம் நட்புக் கரங்களையும் நீட்டி தம் படைகளைப் பெருக்குவதற்காக கொங்குக் குடிகளோடு நட்புறவு கொண்டனர். காரி என்னும் வள்ளலின் வீரத்தால் முவேந்தளுள் ஒருவரான சேரரோடு நல்ல நட்புறவு கொண்டவன் எனக் கபிலர் புறநானூற்றில் குறிப்பிடுகிறார் “மூவருள் ஒருவன் துப்பாகியர்” (புறம் 122). அதற்குச் சான்றாக விளங்குவது பெருஞ்சேரல் இரும்பொறையின் கொல்லிப் போர், கொல்லிப் பகுதியை ஆண்டு வந்தவர் ஓரி என்னும் வள்ளல்; நவமணிகளும் பல்வேறு மரங்களும் செழித்திருந்த அப்பகுதியை கைப்பற்ற எண்ணி தானே நேரே படையெடுத்துச் செல்லாது மலையமான் என்னும் காரி வள்ளலையும் சில குடிகளையும் பயன்படுத்திப் போரினை நடத்தினார். கடுமையாக நடந்த அப்போரில் ஓரியின் படைகள் தோற்கடிக்கப்பட்டு கொல்லிப் பகுதி சேரர் கைவசம் சென்றது. போருக்கு வராமலே சேரர்கள் வென்றனர்.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது சிறுகுடிகளைத் தம் எண்ணத்திற்குத் தகுந்தார்ப்போல் பேரரச மரபு எப்படியெல்லாம் உழைப்புச் சுரண்டலிலும் உடைமைச் சுரண்டலிலும் ஈடுபட்டுள்ளது என்பதுதான். போருக்குப் பல்வேறு வகையான

காரணங்களை பல புலவர்கள் கூறினும் அதன் ஓரங்களில் ஒளிந்துள்ளது அந்த நிலத்தின் மீதான ஆசையும் வணிக மேலாண்மையும்.

**உலகளாவிய கடல் வணிகத் தொடர்பு**

கொங்கு நாட்டின் செல்வங்கள் கடல் வணிகத்தில் அரேபிய வியாபாரிகள் மூலம் சங்ககாலத்திலேயே எகிப்தின் அலெக்சாந்திரியத் துறைமுகம் வரை சென்று சேர்ந்தது. கொங்குநாடு உள்நாடு அதற்கென்று கடற்கரையோ துறைமுகமோ இல்லை இருப்பினும் பண்டமாற்று முறையின் மூலம் சேரப் பகுதி வணிகர்களோடு இருந்த தொடர்பின் காரணமாக கொங்குநாட்டின் பொருள்கள் கடல்பயணம் செய்தன. பொ.ஆ.பி ஒன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு சேரர்கள் கொங்குப் பகுதிகளைக் கைப்பற்றிய பிறகு கொங்குநாட்டுப் பொருள்கள் பன்மடங்கு அதிக அளவில் கடல்வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டது. உண்மையில் கொங்குநாட்டின் மணிகளும், தந்தங்களும் பிற பொருள்களும் வெளிநாட்டவர் வங்கிப் பொக்கிசமாய் சேர்த்து வைத்தனர்.

உரோமாணிர்களும் யவணர்களும் கொங்குப் பகுதியின் நீலக்கல்லுக்கும், கதர்மணிகளுக்கும் பொன்னை வாரி வாரிக் கொடுத்து வாங்கிச் சென்றனர் என்கிறார் உரோம் நாட்டு அறிஞர் பிளைனி. அயல் நாட்டு ஏற்றுமதியில் கொங்குப் பகுதியின் நீலக்கற்கள், கதிர்மணிகள், யானைத் தந்தங்கள், யானைத்தந்தத்தால் செய்த கைவினைப் பொருள்கள் போன்றவற்றை பொ.ஆ.பி ஒன்றாம் நூற்றாண்டின் பின்னர் தான் அதிகமாகக் காணப்படுகிறது. நீலக் கற்கள் கொங்கு நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள புன்னாடி என்னும் இடத்தில் இருந்ததாகவும் அவற்றை சுரங்கம் வெட்டி இப்பகுதி மக்கள் எடுத்தனர் என்றும் பிளைனி குறிப்பிடுகிறார், மேலும் காங்கேயத்தின் அருகில் உள்ள படியூரில் பச்சை கற்கள் கிடைத்தன என்றும் பிளைனி கூறுகிறார். அவர் படியூரை படொராஸ் எனக் குறிக்கும் தகவலை துரை அங்குசாமி தம் நூலில் குறிப்பிடுகிறார். இவை சேர நாட்டின் தொண்டி, முசிறி துறைமுகங்கள் வழியாக யவனம், உரோம் போன்ற பகுதிகளுக்குச் சென்றது. இத்தகு சிறப்பினை சேரர்களின் கடல்வாணிபம் பெற சேரர்களின் படையெடுப்பே காரணமாக இருந்தது.

**நாணயப் புழக்கமும் பொருளாதார மாற்றமும்**

பொ.ஆ.பி ஒன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகே தமிழகத்தில் குறிப்பாக கொங்கு நாட்டில் காசுகளின் பயன்பாடு பெருகியது. அதுவரை பண்டமாற்று முறையை பின்பற்றிய மக்கள் துறைமுகங்களில் இருந்து வந்த யவன வியாபாரிகள் கொடுத்த காசுகளை மாற்றி வியாபாரம் செய்தனர்.

“மனைக் குவைஇய கறி மூடையால்,

கலிச் சும்மைய கரை கலக்குறுந்து;

கலம் தந்த பொற் பரிசம்

கழித் தோணியான், கரை சேர்க்குந்து” (புறம் 343)

என்னும் பாடல் யவனர்கள் பொற் காசுகளைத் தந்து இங்குள்ள பொருள்களைப் பெற்றுச் சென்றதைக் கூறுகிறது.

கொங்குப் பகுதியின் நீலக் கற்களுக்கும் கதிர் மணிக்கர்களுக்கும் யானைத் தந்தத்திற்கும் அவற்றால் செய்யப்பட்ட கைவினைப்பொருட்களுக்கும் உரோம் நாட்டு மக்கள் மயங்கினர் என்று பிளைனி குறிப்பிடுகிறார். ‘ஆண்டு தோறும் 11,00,000 பவுன் மதிப்புள்ள பொன்னும், வெள்ளியும் வணிகத்தின் பொருட்டு கிழக்கு நாடுகளுக்குப் போய்விடுகிறது என தன நூலில் குறிபிடுகிறார்’ (கொங்குநாட்டு வரலாறு, மயிலை சீனி வேங்கடசாமி ப. 127). இதற்கு சான்றாகும் வகையில் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் உரோம் நாட்டின் வெள்ளிக் காசுகள் புதையல்களாக 1842, 1850, 1891, 1931 அகழாய்வுகளில் வெள்ளலூரில் கிடைத்துள்ளன. இன்னும் பல இடங்களில் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளிலும் நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை வெறும் காசுகள் அல்ல வணிகத்தில் சேரர் செழுமையுற்று விளங்கியதன் சான்றுகள், கொங்குப் பகுதியின் வளங்களைச் செழுமையை உலகம் போற்றியதைக் காட்டும் ஆதாரங்கள்.

**முடிவுரை**

பொ.ஆ.பி முதலாம் நூற்றாண்டில் அந்துவஞ்சேரல் இரும்பொறையில் தொடங்கிய கொங்குச் சேரர் மரபு அந்த நிலப்பரப்பின் பொருளாதார வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. சேரர்களின் படையெடுப்பு நில ஆதிக்கத்திற்காகத் தொடங்கினாலும், அது கொங்கு நாட்டின் இயற்கை வளங்களை உலகச் சந்தைக்குக் கொண்டு செல்லும் பாலமாக மாறியது. குறிப்பாக, உள்நாடாக இருந்த கொங்குப் பகுதி, சேரர்களின் கடல் மேலாண்மையால் உரோம் மற்றும் யவன தேசங்களுடன் நேரடி வணிகத் தொடர்பைப் பெற்றது. பண்டமாற்று முறையில் இருந்த மக்களை நாணயப் புழக்கத்திற்கு இட்டுச் சென்ற பெருமை சேரர் காலத்து வணிகத்தையே சாரும். இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும், துறைமுகத் தொடர்புகள் நேரடியாகத் துண்டிக்கப்பட்டதாலும் இந்த வணிக எழுச்சி மங்கத் தொடங்கினாலும், சேரர்கள் ஆண்ட அந்த இருநூறு ஆண்டுகள் கொங்கு நாட்டை ஒரு சர்வதேச வணிக மையமாக நிலைநிறுத்திய பொற்காலமாகும். இதன் புறகாரணங்களாக பின்னர் உருவான சோழர்கள் ஆட்சி இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏற்ப்பட்ட சமய எழுச்சியும் களப்பிரர் ஆட்சியும் தொடர்ந்து ஒரு நிலையில்லாதப் போர்ச்சூழலை ஏற்படுத்தியதன் விளைவாகக் கூட இருக்கலாம்.

**துணை நூற்பட்டியல்**


- சாமிநாதையர் உ.வே. டாக்டர் (2011), பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
- துரைசாமிப்பிள்ளை ஔவை.(1968), புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.
- துரை அங்குசாமி டாக்டர் (2010), தென் கொங்குநாடு: தமிழரின் வரலாற்றுக் கருவூலம் விஜய கோகுலம் பப்ளிகேஷன்ஸ், உடுமலை.
- வேங்கடசாமி, மயிலை சீனி. (1978), கொங்கு நாட்டு வரலாறு : பழங்காலம் - கி.பி. 250 வரையில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.